செ.வெ.எண்: 187/2019 நாள்: 7.4.2019

**திருவண்ணாமலை மாவட்டம் - பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2019**
**வாக்குச் சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் பயிற்சி வகுப்பு**
**மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு...**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை மவுண்ட் செயின்ட் ஜொசப் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மற்றும் கலசபாக்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆகிய மைங்களில் இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலமாக நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தல்-2019 முன்னிட்டு இன்று (7.4.2019) நடைபெற்ற வாக்குச் சாவடி அலுவலர்களுக்கான இரண்டாவது பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீதேவி உடன் இருந்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலமாக நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் 11.திருவண்ணாமலை மற்றும் 12.ஆரணி ஆகிய இரண்டு பாராளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்டு 62.செங்கம் (தனி), 63.திருவண்ணாமலை, 64.கீழ்பென்னாத்தூர், 65.கலசப்பாக்கம், 66.போளூர், 67.ஆரணி, 68.செய்யாறு, 69.வந்தவாசி (தனி) ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளில் 2372 வாக்குச் சாவடிகள் உள்ளன. இந்த வாக்குச் சாவடிகளில் பணிபுரியவுள்ள அலுவலர்களுக்கான முதல் பயிற்சி வகுப்பு கடந்த 31.3.2019 அன்று மாவட்ட முழுவதும் 10 மையங்களில் நடைபெற்றது. மேலும், இரண்டாவது பயிற்சி வகுப்பு இன்று 7.4.2019 நடைபெற்றது, இதில், சட்டமன்ற தொகுதி வாரியாக 62.செங்கம் தொகுதியில் 323 வாக்குச் சாவடிகளுக்கு 1556 அலுவலர்களும், 63.திருவண்ணாமலை தொகுதியில் 296 வாக்குச் சாவடிகளுக்கு 1470 அலுவலர்களும், 64.கீழ்பென்னாத்தூர் தொகுதியில் 285 வாக்குச் சாவடிகளுக்கு 1381 அலுவலர்களும், 65.கலசப்பாக்கம் தொகுதியில் 281 வாக்குச் சாவடிகளுக்கு 1356 அலுவலர்களும், 66.போளூர் தொகுதியில் 285 வாக்குச் வாடிகளுக்கு 1374 அலுவலர்களும், 67.ஆரணி தொகுதியில் 311 வாக்குச் சாவடிகளுக்கு 1511 அலுவலர்களும், 68.செய்யாறு தொகுதியில் 311 வாக்குச் சாவடிகளுக்கு 1500 அலுவலர்களும், 69.வந்தவாசி தொகுதியில் 280 வாக்குச் சாவடிகளுக்கு 1354 அலுவலர்களும், ஆக மொத்தம் 2372 வாக்குச் சாவடிகளுக்கு 11,502 அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இன்று இரண்டாவது பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சி வகுப்பில் தேர்தல் பணியில் உள்ள அலுவலர்களுக்கான அஞ்சல் வாக்கு சீட்டு செலுத்தும் முறை, வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் பணிகள், பொறுப்புகள், வாக்குப்பதிவு அலுவலர் 1, 2, 3, பணிகள் குறித்து தெரிவிக்கப்பட்டது. மேலும், வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் அலுவலர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களை கையாளும் முறை, வாக்குப்பதிவிற்கு முந்தைய நாள் வாக்குச்சாவடிக்கு சென்றவுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள், வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள், வாக்குப்பதிவு இயந்திரங்களை இணைப்பது எப்படி, வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட வேண்டிய அமைப்பு, மாதிரி வாக்குப்பதிவு முறை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுது ஏற்படும் போது என்ன செய்ய வேண்டும், வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய படிவங்கள் மற்றும் தயார் செய்ய வேண்டிய உறைகள், மண்டல அலுவலரிடம் வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் சேர்த்து அளிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் வாக்குப்பதிவு முகவர்களுக்கான குறிப்புகள், ஆகியவை குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**